நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டுமென்று பெயர் தந்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிமிடம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி எல்லோரும் என்னுடன் ஒத்துழைத்து, பெயர் கொடுத்துள்ள எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் கிடைக்கும்படி, குறிப்பிட்ட நிமிடத்திற்குள் தங்கள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். திரு. எஸ். ஆர். இராதா.

(1) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஈ) ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெறுமுன் வெளியில் கருத்துக்களை கூறி அவை பிரசுரிக்கப்படுவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: சார், On a point of order, பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடைபெறுவதற்கு முன்னால் அதுபற்றிய கருத்துக்களை வெளியில் கூறுவதும், அதைச் செய்தித் தாளில் பிரசுரிப்பதும் ஒழுங்குதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் அதுபற்றி உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப விரும்பினால், அதை எழுத்துமூலம் கொடுங்கள். நான் அதைப் பரிசீலித்து என்னுடைய முடிவினைத் தெரிவிக்கிறேன்.

4. விளக்கம் கோரல்.

அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் உரிமை மீறல் பற்றிய தீர்மானம் ஆகியவைபற்றி குறிப்பிடப்படாதது பற்றி.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, விதி 42 இன் கீழ் பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். பேரவை விதிப்படியே அவை கூடுவதற்கு முன்பாகவே கொடுத்திருக்கிறோம். மற்ற அலுவலை எடுத்துக்கொள்வதற்கு முன்பு அந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதி சொல்கிறது. அவற்றைப் பற்றி தாங்கள் எதுவும் சொல்லவில்லை.